## தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினால் 2021-ம் ஆண்டு தொடங்கப்பட்டது!

# ஏழைகளுக்கு வரப்பிரசாதமான மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்!

சென்னை, ஜூலை 17 -

மக்களைத் தேடி மருத்துவத்துக்கு முன்பு, நோய் சிகிச்சைக்காக ரூ.300 முதல் ரூ.1000 வரை செலவு செய்த நிலையில் இத்திட்டம் மருத்துவச் செலவுகளைப் பெருமளவில் குறைக்க உதவியது. குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இத்திட்டம் பெரிய அளவில் உதவிகரமாக இருப்பது கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து மருத்துவத்துறை வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாட்டில் 70% இறப்புகளுக்கு தொற்று அல்லாத நோய்கள் காரணமாக இருக்கிறது. அதில் 30%க்கும் அதிகமானோர் உயர் ரத்த அழுத்தத்தாலும், 15%க்கும் அதிகமானோர் நீரிழிவு நோயாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு தீர்வு காண 2021ம் ஆண்டு ஆகஸ்ட்டில் 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு தொற்றாத நோய்களுக்கு இலவசமாக பரிசோதனை செய்யப்படுகிறது.

கூடுதலாக 45 வயதுக்கு மேற்பட்டவர்கள், மேற்கண்ட நோய்களால் நடக்க இயலாமல் இருப்பவர்கள், சுகாதார வசதி வாய்ப்புகள் குறைவாக உள்ளவர்கள், உயர் ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச மருந்துகளை வீடுகளுக்கே சென்று வழங்கப்படுகிறது. மேலும் நீரிழிவு, உயர் ரத்த அழுத்த பரிசோதனை மற்றும் நோய் கண்டறிதல் முதல் நாள்பட்ட சிறுநீரக நோயாளிகளுக்கான டயாலிசிஸ் சிறுநீரக மேலாண்மை மற்றும் மார்பக, வாய் மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் பரிசோதனைகள் வரை பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைகளை உள்ளடக்கியது. தொற்றாத நோய்களுக்கான மருந்துகள், பிசியோதெரபி மற்றும் நோய் தடுப்பு சிகிச்சை இலவசமாக வழங்கப்படுகிறது. பெண் சுகாதார தன்னார்வலர்கள் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

**வீடு தேடி மருத்துவ உதவி!**

இத்திட்டம் குறித்து சென்னை மருத்துவக் கல்லூரியின் சமூக மருத்துவத் துறை ஆய்வு மேற்கொண்டது. 6000 பேரிடம் நடத்திய சோதனையில் நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்தத்திற்கான சிகிச்சைக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதில் இத்திட்டம் வெற்றியடைந்துள்ளதாக கண்டறிந்துள்ளது. சர்க்கரை நோய் மற்றும் உயர் ரத்த அழுத்தத்திற்கு பரிசோதனை செய்யப்பட்டவர்களில் 3ல், 2 பேர் பொது நிறுவனங்களில் பரிசோதிக்கப்படுகின்றனர். கணக்கெடுப்பு சோதனைகளில் பாதி வீட்டிலேயே மேற்கொள்ளப்பட்டது, இது திட்டத்தின் வெற்றிக்கு சான்றாகும்.

மக்களைத் தேடி மருத்துவத்திற்கு முன் 60க்கும் அதிகமான மக்கள் தொகையில் கால் பகுதியினர் மட்டுமே நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்தத்திற்காக பரிசோதிக்கப்பட்டனர். இந்த மக்களைத் தேடி மருத்துவ திட்டத்திற்கு பிறகு 36% ஆக அதிகரித்துள்ளது. கிராமப்புறங்களுக்கு பரிசோதனை சேவைகளை வழங்குவதில் வெற்றி பெற்றுள்ளது. மக்களைத் தேடி மருத்துவத்திற்கு பிறகு நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்தம் பரிசோதனைகள் 20 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்தியாவில், சுகாதாரம் தொடர்பான செலவினங்களில் கிட்டத்தட்ட பாதி மக்களின் சொந்த பணத்தில் இருந்தே செலவிடப்படுகிறது.

மருத்துவத்துக்குச் செலவு செய்வது பின்தங்கிய விளிம்பு நிலை குடும்பங்களுக்கு மிகப்பெரிய சுமையாக இருக்கும். மாநில மக்கள் தொகையில் 10%க்கும் அதிகமாக சுகாதாரத்திற்காக செலவிடுவது 3.3%லிருந்து 5.4% ஆக அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் மாநில மக்கள் தொகையின் விகிதத்தில் 25% க்கும் அதிகமானவர்கள் சுகாதாரத் திற்காக செலவிடுவது 1.2%ல் இருந்து 1.9 ஆக அதிகரித்துள்ளது. தற்போது, தமிழகத்தில் மொத்த மருத்துவச் செலவில் 44% மக்கள் தங்கள் சொந்த பணத்தில் இருந்து செலவு செய்கிறார்கள்.

**மருத்துவ செலவை குறைக்கும் திட்டம்!**

மக்களைத் தேடி மருத்துவத்துக்கு முன், கணக்கெடுப்புக்கு உட்பட்ட ஏழ்மையான மக்கள் அவர்களின் மாத குடும்ப வருமானத்தில் 10% க்கும் அதிகமாக நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்த சிகிச்சைக்காக செலவிட வேண்டியிருந்தது. திட்டம் தொடங்கப்பட்டதும், பரிசோதனைகள் மற்றும் நோய் அறிகுறிகளுக்கான மருத்துவச் செலவு பாதியாகக் குறைந்தது. மக்களைத் தேடி மருத்துவத்துக்கு முன்பு நோய்சிகிச்சைக்காக (மருந்துகள், பயணச் செலவு மற்றும் ஊதிய இழப்பு உள்பட) நபர் ஒன்றுக்கு சராசரியாக ரூ.500, குறைந்த வருவாய் பிரிவினருக்கு ரூ.300, பணக்காரர்களுக்கு ரூ.1000 என இருந்தது.

மக்களைத் தேடி மருத்துவத்திற்கு பிறகு, சிகி ச்சைக்காக நபர் ஒருவருக்கு சராசரியாக ரூ.200 ஆக குறைந்து, இத்திட்டம் மருத்துவச் செலவுகளைப் பெருமளவில் குறைக்க உதவியது. குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இத்திட்டம் பெரிய அளவில் உதவிகரமாக இருப்பது கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. இந்த திட்டத்திற்குப் பின் சொந்த பணத்தில் செய்யப்படும் மருத்துவச் செலவுகள் பாதியாக குறைந்துள்ளன. இந்தியாவில் தொற்றாத வாழ்வியல் நோய்களை குறைத்து மதிப்பிடுவதற்கான புதிய நுண்ணறிவையும் இந்த ஆய்வு வழங்குகிறது.

**நோய் பரவும் விகிதம் குறைவு!**

15-54 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் 15-49 வயதுக்குட்பட்ட பெண்களின் நோய்களை மட்டுமே கணக்கெடுக்கும் தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பில் இந்தியாவில் தொற்றாத வாழ்வியல் நோய் பரவல் பற்றிய பெரும்பாலான பொதுப் புரிதல் தான் இதுவரை பெறப்பட்டது. இந்த ஆய்வு 30 வயதுக்கு மேற்பட்டோரிடம் நடத்தப்பட்டதால் நோயின் பரவுதல் விகிதம் கூடுதலாக இருப்பதைத்துல்லியமாகக் கண்டறிய முடிந்தது. மக்கள் தொகையின் வயதுக்கு ஏற்ப நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்தத்தின் பாதிப்பு அதிகரிப்பதை இந்த ஆய்வு உறுதி செய்துள்ளது.

இந்த ஆய்வின்படி, உயர் ரத்த அழுத்தத்தின் பாதிப்பு 27%, நீரிழிவு நோய் 22% ஆகும். நகர்ப்புறங்களில் உள்ளவர்களுக்கும் ஆண்களுக்கும் இந்த பாதிப்பு அதிகமாக உள்ளது. ஆண்களில் நான்கில் ஒரு பகுதியினர் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ளவர்களில் கால் பகுதியினர் உயர் ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் இந்தப் புள்ளி விவரங்களை சரிபார்ப்பதற்கு இன்னும் விரிவான ஆய்வுகள் தேவைப்படுகிறது.

இத்திட்டம் தமிழக மக்களுக்கு நேர்மறையான சுகாதார விளைவுகளை உருவாக்கி இருப்பதாக அறிக்கை காட்டுகிறது.

**கிராமப்புறங்களில் மருத்துவ மேம்பாடு!**

ஆனால் நகர்ப்புறங்களில் இதன் விளைவு மிகக் குறைவாக உள்ளது, நகர்ப்புற குடும்பங்களில் 57% மட்டுமே ஒரு பெண் சுகாதார தன்னார்வலரால் பார்வையிடப்பட்டிருக்கிறார்கள். 83% கிராமப்புற குடும்பங்கள் பார்வையிடப்பட்டிருக்கின்றன. மாதிரி கணக்கெடுப்பில் உள்ள இந்த இடைவெளி பரிசோதனை விகிதங்களை பாதிக்கிறது. நகர்ப்புறங்களில் குடியிருப்பவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், 60% கிராமப்புறங்களில் வசிப்பவர்கள் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தால் பரிசோதிக்கப்பட்டவர்கள். இவர்கள் நோயறிதல் மற்றும் அதற்கான சோதனைகளுக்காக மக்களைத் தேடி மருத்துவத்தால் பரிசோதிக்கப்பட்டுள்ளனர்.

கூடுதலாக, இந்த திட்டம் புற்றுநோயையும் பரிசோதிக்கும் நோக்கத்தில் இருந்தாலும், இத்திட்டத்தின் கீழ் உள்ள மூன்று புற்றுநோய்களில் 20% பேருக்கு மட்டுமே பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக ஏழை குடும்பங்களுக்கு, புற்றுநோய் சிகிச்சைக்கான செலவுகளை பொறுத்தவரை விலை உயர்ந்தது என்பதால், புற்றுநோய் பரிசோதனை மற்றும் ஆலோசனை விழிப்புணர்வை அதிகரிப்பது இந்த சுமையைக் குறைக்கும். மக்களைத் தேடி மருத்துவம் ஏழை மற்றும் தாழ்த்தப்பட்ட குடும்பங்களிடையே தொற்றாத வாழ்வியல் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கும், உடனடியாக உரிய சிகிச்சை அளிப்பதற்கும் உதவுவதை உறுதி செய்துள்ளது. இவ்வாறு மருத்துவத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

★ நீரிழிவு, உயர் ரத்த அழுத்த பரிசோதனை அதிகரிப்பு

மக்களைத்தேடி மருத்துவம் திட்டமானது ஏழைகளுக்கு மருத்துவ வசதியை அதிகரித்துள்ளது. இந்த திட்டம் செயல்படுவதற்கு முன், குறைந்த வருமானம் உள்ள மக்கள் 33% பேர் மட்டுமே நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்தத்திற்காக பரிசோதிக்கப்பட்டனர். அதேசமயம் திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு இது 50% ஆக உயர்ந்துள்ளது. விலையுயர்ந்த சிகிச்சை தேவைப்படும் தொற்று அல்லாத நோய்களுக்கு மக்களைத் தேடி மருத்துவ குழு பரிசோதனைகள் மற்றும் நோயறிதல் சேவைகளை அதிகரிப்பதன் மூலம் இந்த பிரச்சினையை பெருமளவில் சரி செய்துள்ளது. மக்களைத் தேடி மருத்துவத்தின் கீழ் 44% மக்கள் நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்தத்திற்காக பரிசோதிக்கப்பட்டுள்ளனர். இது மக்களைத் தேடி மருத்துவத்திற்கு முந்தைய பரிசோதனைகளில் இந்த எண்ணிக்கை 38% மட்டுமே இருந்தது.



புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மங்களாகோவில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி நடைபெற்ற இரத்ததான முகாமினை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா , கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, ஒன்றியக் குழுத் தலைவர் கார்த்திக், ஊராட்சி மன்றத் தலைவர் பரமசிவம், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## பொதுவுடைமை லட்சியங்களைக் கடைப்பிடிப்பதில்

# நம் எல்லோருக்கும் வழிகாட்டியாக விளங்குபவர்!

## சங்கரய்யா 102வது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 17 -

சங்கரய்யா அவர்களின் 102 ஆவது பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**பொதுவுடைமை இயக்கத்தின் முதுபெரும் தலைவர் 'தகைசால் தமிழர்' சங்கரய்யா அவர்களின் 102 ஆவது பிறந்தநாள்!**

**பொதுவாழ்விலும் பொதுவுடைமை இலட்சியங்களைக் கடைப்பிடிப்பதிலும் நம் எல்லோருக்கும் வழிகாட்டியாக விளங்கும் அவர் நலமுடன் வாழிய பல்லாண்டு!**



இவ்வாறு தமது வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# வரலாற்று அடையாளம்!



மதுரையில் திறக்கப்பெறும்
கலைஞர் நூற்றாண்டு நூலகம்
கலைஞரின் மாட்சிக்கும்
தளபதியின் ஆட்சிக்கும்
வரலாற்று அடையாளமாகும்

தமிழச் சாதியை
அறிவுக் குடிமக்களாக்கி
இந்த ஏழு தளங்களும்
ஏழு கண்டங்களுக்கும்
இட்டுச்செல்க என்று
வாழ்த்துகிறோம்

தமிழ்நாடு கர்வப்படும்
காரணங்களுள்
இதுவும் ஒன்று

- கவிப்பேரரசு
**வைரமுத்து**





முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 37 லட்சம் மதிப்பில் 2 நியாயவிலை கடைகள் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்து, 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியை நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நாமக்கல் நகர கழகச் செயலாளர்கள் (தெற்கு) ராணா ஆர்.ஆனந்த், (கிழக்கு) செ.பூபதி, (மேற்கு) அ.சிவக்குமார், நகர்மன்ற தலைவர் து.கலாநிதி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் சி.ஆனந்தகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

